This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு!

www.writersujatha.com

மேடை நாடகம்

இந்த நாடகத்தின் மேடை மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மையப் பகுதியில் ஒரு வழக்கு நடக்கிறது. அந்த வழக்கில் சில முக்கியமான சாட்சியங்கள்–காட்சிகள் இடது – வலது–வழக்கில் சாட்சி சொல்லிக் கொண்டிருப்பவர்களே நடு–முன்–இடது–வலது நடிப்பிலும் தேவைப்படும்போது, அவர்கள் அங்கே சென்று கலந்து கொள்ளலாம். அரங்கத்தின் ஒளி அமைப்பு இதற்கு ஏற்றபடி இருக்க வேண்டும். நடுவே கோர்ட்டில் நடக்கும்போது, அந்தப் பகுதி பொதுவாக ஒளி பெற்றிருக்கும்–போது, மற்றப் பகுதிகள் இருட்டுக்கு மிக அருகே இருக்க வேண்டும். அங்கே இருப்பவர்கள் தெரியக் கூடாது. இதற்காக அந்தப் பகுதியில் அரங்க அமைப்பை எளிதாக வைத்துக் கொள்வது நல்லது. இந்த நாடகத்தை செட்டுகள் ஏதும் இன்றியே ஒளியால் பிரித்து நடிக்க முன்வந்தாலும் எனக்குச் சம்மதமே.

_சுஜாதா

## காட்சி–1

[நாடகத்தின் நடுவே கோர்ட்டு. எந்தக் கோர்ட்டு என்பது முக்கியமானதல்ல. அது ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட், அல்லது செஷன்ஸ் கோர்ட்டாக, அல்லது ஹைகோர்ட்டாக இருக்கலாம். அலுப்புத் தட்டும் வகையில் ஒரு சூழ்நிலையைக் காட்டினால் நல்லது. நீதிபதி–வழக்கை நடத்தும் மற்றவர்கள்–எல்லோரிடமும் அவசரமில்லாத் தன்மை. நியாயத்தைவிட விதிமுறைகளுக்குக் கட்டுப்படவேண்டிய கட்டாயம் இருப்பவர்–களாகத் தோன்றுகிறார்கள். வழக்குக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான உணர்ச்–சிபூர்வமான தொடர்பும் இல்லாமல், அடிக்கடி தணிந்த குரலில் பேசிக்கொள்கிறார்கள்.

நீண்ட சதுர மேஜை, அதற்கு மேலே சுவரில் சம்பிரதாயமாக காந்திப் படம். நாற்காலியில் ஒரு நீதிபதி உட்கார்ந்து கொண்டு பத்திரிகை படித்துக்கொண்டிருக்–கிறார். பத்திரிகை முகத்தை மறைக்கிறது. அவருக்கு அருகே முன் பக்கத்தில் ஒரு கிளார்க், ஒரு பெரிய பைல் கத்தையை அவர் முன் வைத்து, 'க்கும்' என்று கனைக்கிறார். நீதிபதி பேப்பரிலிருந்து நிமிர்ந்து, இயந்திரம் போல் மேஜையைத் தட்டி, 'ஆர்டர் ஆர்டர்' என்கிறார். மேடைமேல் ஒளி அதிகரிக்க முன்பக்கத்தில் மேஜை போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் எதிர்த்தரப்பு வக்கீலும் மற்றவரும் எதிரே குற்றவாளிக் கூண்டிலே நின்றிருக்கும் டாக்டர் நரேந்திரனுக்கு தெளிவாகத் தெரிகிறார்கள். டாக்டர் நரேந்திரனுக்கு ஐம்பது வயது இருக்கலாம். அவர் முகத்தில்